


தமிழ்
# மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, அக்டோபர் 11, 2026 | இதழ் 181

## விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு. சென்னையில் முதலமைச்சர் விஜய்யுடன் மதிய விருந்து சாப்பிட்ட ராகுல் காந்தி. அரசியல் சூழல் குறித்து பேசினர்

சென்னை, 11 அக்டோபர் 2026: இந்திய கல்வி முறையில் நடைபெறும் முறைகேடுகள், நீட் உள்ளிட்ட தேர்வுத்தாள் கசிவுகள், கல்விக் கட்டண உயர்வு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களை திரட்டி நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி 'மாணவர்களின் குரல்' என்ற நிகழ்ச்சி வாயிலாக அவர்களிடம் பேசி வருகிறார்.

அதன்படி, ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் தொடங்கி, மராட்டிய மாநிலம் புனே மற்றும் நாசிக் நகரங்கள், மத்திய பிரதேசம் மாநிலம் இந்தூர் போன்ற இடங்களில் மாணவர்கள் குரல்' நிகழ்ச்சி நடத்திய ராகுல்காந்தி, இன்று சென்னையில் உள்ள தீவுத் திடலில் மாணவர்கள் முன்னிலையில் பேச இருக்கிறார்.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டது. சென்னை தீவுத்திடலில் ராகுல் காந்தி பங்கேற்கும் 'மாணவர்கள் குரல்' நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ்நாடு காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூர் நேற்று பார்வையிட்டார். அவருடன், மேலிட பொறுப்பாளர் குலாம் அகமது மிர், இணை பொறுப்பாளர் நிவேதித் ஆல்வா, அமைச்சர்கள் ராஜேஷ் குமார், விஸ்வநாதன், சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் தாரகை கத்பர்ட் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

ராகுல் காந்தி சென்னை வருகை

மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இன்று மதியம் 12.30 மணிக்கு சென்னை விமான நிலையத்திற்கு ராகுல் காந்தி வருகை தந்தார். அவருக்கு காங்கிரஸ் மாநிலத் தலைவர் மாணிக்கம் தாகூர் தலைமையில் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். சென்னை விமான நிலையத்தில் இருந்து நீலாங்கரையில் உள்ள முதலமைச்சர் விஜய் வீட்டிற்கு சென்றார். ராகுல் காந்தியை முதலமைச்சர் பூங்கொத்து கொடுத்து வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர். பின்னர் விஜய் அளித்த மதிய விருந்தில் ராகுல் காந்தி கலந்து கொண்டார். பின்னர் இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனையின் போது, தற்போதைய அரசியல் சூழல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப் பட்டதாக கூறப்படுகிறது.



சென்னை தீவுத் திடலில் இன்று மாலை 5 மணியளவில் நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கும் மாணவர்களின் குரல்' நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதற்காக தமிழ்நாடு முழுவதும் இணைய தளம் மற்றும் கியூ.ஆர். கோடு மூலம் நடத்தப்பட்ட மாணவர்கள் பதிவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில், 10 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் மட்டுமே பங்கேற்க உள்ளனர்.

மாணவர்கள் நிகழ்ச்சி

ராகுல்காந்தி கலந்து கொள்ளும் மாணவர்கள் நிகழ்ச்சிக்காக பிரமாண்ட பந்தல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பந்தலுக்கு வெளியேயும் ஏராளமானோர் நின்று கொண்டு ராகுல்காந்தி நிகழ்ச்சியை பார்ப்பதற்காக அகண்ட திரைகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும் உரிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், முன்னாள் கல்லூரி முதல்வர்கள் என முக்கியமான நபர்கள் 350 பேருக்கு மட்டும் இருக்கை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இருந்து ஏராளமான கல்லூரிகளில் இருந்து மாணவ-மாணவிகள் கலந்து கொள்ள உள்ளனர். மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வரும் ராகுல்காந்தி தாஜ் கன்னிமாரா ஓட்டலில் காங்கிரஸ் நிர்வாகிகள் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்திக்கிறார்.

நிகழ்ச்சி முடிந்து இரவு 9.30 மணியளவில் விமானம் மூலம் டெல்லி புறப்படுகிறார்.

## பிரதமர் நரேந்திர மோடி, ரூ.13,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்க நாளை சென்னை வருகிறார்

சென்னை, 11 அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி (2026 அக்டோபர் 11) தமிழ்நாட்டின் சென்னைக்கு வருகை தரவுள்ளார். காலை சுமார் 11:30 மணியளவில், அவர் சென்னை மெட்ரோவில் போரூர் புறவழிச் சாலை நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை நிலையம் வரை சென்று திரும்புகிறார். மதியம் சுமார் 12:15 மணியளவில், அவர் சென்னையில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோவிலில் தரிசனம் செய்கிறார். அதைத் தொடர்ந்து, அவர் சென்னை ஐஐடி-ல் உள்ள மூளை ஆராய்ச்சி மையத்தை நேரில் பார்வையிடுவார்.

பிற்பகல் சுமார் 1:30 மணியளவில், ரூ.13,000 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். மேலும், அவர் இந் நிகழ்ச்சியில் உரையாற்றவுள்ளார்.

சுமார் ரூ.4,900 கோடி செலவில் கட்டப்பட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டமான பூந்தமல்லி-வடபழனி வழித்தடத்தை பிரதமர் திறந்து வைக்கிறார்.

சுமார் ரூ.3,700 கோடி மதிப்பிலான முக்கிய தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்குப் பிரதமர் அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

பிரதமர், தேசிய நெடுஞ்சாலை 744-ன் 36 கிலோ மீட்டர் நீளமுள்ள, நான்கு வழிச் சாலையான வடுகப்பட்டி - தெற்கு வெங்கநல்லூர் சாலையைத் திறந்து வைக்கிறார். மேலும் அவர் தேசிய நெடுஞ்சாலை 744ஏ-ன் 30 கிலோ மீட்டர் நீளமுள்ள, நான்கு வழிச் சாலையான மதுரை சுற்றுச் சாலைப் பகுதியையும் திறந்து வைக்கிறார்.

தேசிய நெடுஞ்சாலை 83-ன் ரூாகப்பட்டினம்-தஞ்சாவூர் பிரிவில் நான்கு வழி திருவாரூர் புறவழிச் சாலைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

ரூ.750 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான ரயில்வே உள்கட்டமைப்புத் திட்டங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். காரைக்கால்-பேரளம் ரயில் பாதையையும், கோயம்புத்தூர், அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள மூன்று ரயில் மேம்பாலங்களையும் அவர் திறந்து வைக்கிறார். அம்ரித் பாரத் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்ட பழனி, வேலூர் கண்டோன்மென்ட், அம்பாசமுத்திரம், பரமக்குடி, நாமக்கல் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து ரயில் நிலையங்களையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

தமிழ்நாட்டில் கடல் சார் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், சரக்கு கையாளும் திறனை அதிகரிக்கவும், துறைமுகம் தொடர்பான பல திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்கிறார். சென்னை துறைமுகத்தில் நான்கு உள்கட்டமைப்புத் திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

பிரதமர், சென்னையில் உள்ள சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) நிறுவனத்தின் மணலி சுத்திகரிப்பு நிலையத்தில் குரூப் 2/3 லூப் ஆயில் பேஸ் ஸ்டாக்ஸ் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமர், சென்னை ஐஐடி-யில் உள்ள சுதா கோபாலகிருஷ்ணன் மூளை ஆராய்ச்சி மையத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

சென்னையில் உள்ள ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் பொன் விழாக் கொண்டாட்டங்களிலும் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

## வாக்காளர் பெயர் நீக்க மனுக்களுக்கு செக்! - தேர்தல் கமிஷன் அதிரடி

சென்னை 11, அக்டோபர் 2026: வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்கக் கோரும் 'படிவம் 7' மனுக்களை தனிநபர் ஒருவர் மொத்தமாகத் தாக்கல் செய்வதைத் தடுக்கும் வகையில், இந்திய தேர்தல் கமிஷன் புதிய உச்ச வரம்பை விதித்துள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் போது, தேவையின்றி அல்லது தவறான காரணங்களுக்காகப் பிறரது பெயர்களை நீக்கக் கோரி ஒரே நபர் மொத்தமாகப் படிவங்களை அளிப்பதாகப் புகார்கள் எழுந்தன. இதனால் களப்பணியாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கும் தேவையற்ற சிரமங்கள் ஏற்படுகின்றன.

இதனைத் தடுக்கும் வகையில், ஆன்லைன் மற்றும் ஆப்லைன் இரண்டிற்கும் பொருந்தும் வகையில் புதிய வழிகாட்டுதல்களைத் தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது.

இதன்படி இனி, உரிமைகோரல் மற்றும் மறுப்பு கால கட்டத்தில் ஒரு தனிநபர் வாக்காளர் அதிகபட்சமாக 10 படிவங்கள் மட்டுமே தாக்கல் செய்ய முடியும். ஆண்டு முழுவதும் நடைபெறும் தொடர் திருத்தத்தின் போது, தனிநபர் ஒருவர் மாதத்திற்கு 5 படிவங்கள் மட்டுமே அளிக்க அனுமதிக்கப்படுவர்.

பொய் புகாருக்கு கடும் நடவடிக்கை:

மனுதாரரின் கையொப்பம் முறையாக இருக்க வேண்டும் எனவும், சீல் அல்லது முத்திரை வைத்து கையொப்பமிடுவதை ஏற்க முடியாது எனவும் தேர்தல் கமிஷன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. மனுக்கள் மீது தேர்தல் நடத்தும் அலுவலர் உரிய விசாரணை நடத்திய பிறகே முடிவு எடுப்பார்.

யாரேனும் உள்நோக்கத்துடன் போலியான அல்லது தவறான ஆட்சேபனைகளை எழுப்பியது தெரிய வந்தால், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1950, பிரிவு 31ன் கீழ் சம்பந்தப்பட்ட நபர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை பாயும் எனவும் தேர்தல் கமிஷன் எச்சரித்து உள்ளது.

## இந்தாண்டும் அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கவில்லை - அதிருப்தியில் அதிபர் டிரம்ப்

சென்னை 11, அக்டோபர் 2026: இந்தாண்டும் அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கவில்லை என தனது அதிருப்தியை அதிபர் டிரம்ப் வெளிப்படுத்தி இருக்கிறார்.

தமிழ் வம்சாவளியை சேர்ந்த நவநீதம் நவி பிள்ளைக்கு நடப்பாண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது. நடப்பாண்டும் தனக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை என தனது அதிருப்தியை, நியூயார்க்கின் சைராகுஸ் நகரில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் கொட்டி தீர்த்தார். அவர் பேசியதாவது: ஜனநாயகத்திற்கு எதிரானவர்களால் அமைதிக்கான நோபல் பரிசு நிரந்தரமாக மதிப்பு இழந்துவிட்டது.



இதை நாங்கள் மறக்க மாட்டோம் நார்வே. நான் வட மற்றும் தென் கொரியா, ஜப்பான் மற்றும் வட கொரியா, சீனா மற்றும் தைவான் ஆகியவற்றுக்கு இடையே போர்கள் வெடிப்பதைத் தடுக்க உதவினேன். இந்த அவமானகரமான மற்றும் சங்கடமான முடிவு அமைதிக்கான நோபல் பரிசை அறிவிக்கும் குழுவினர் செயல் நார்வே மீது கறையை ஏற்படுத்தியது. இவ்வாறு டிரம்ப் பேசினார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
அக்டோபர் 11, 2026

# சேலத்தில் புதிய சேவை மையத்தைத் திறந்தது ஜிஎம்எம்சிஓ




சேலம் 11, அக்டோபர் 2026: உள் கட்டமைப்பு, சுரங்கத் தொழில் மற்றும் எரிசக்தித் துறைகளுக்குத் தேவையான தீர்வுகளை வழங்குவதில் முன்னணி நிறுவனமாகத் திகழும் ஜிஎம்எம்சிஓ, தமிழ்நாட்டின் சேலத்தில் தனது புதிய அலுவலக மையத்தைத் திறந்து, அப்பகுதியில் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது. வாடிக்கையாளர்களை மேலும் நெருங்கிச் சென்று, அவர்களின் வளர்ந்து வரும் வணிகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

பிராந்திய அளவில் தனது இருப்பை வலுப்படுத்தவும், இயந்திரங்கள், உதிரிபாகங்கள் மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகளை வாடிக்கையாளர்கள் எளிதில் பெறுவதை உறுதிப்படுத்தவும் ஜிஎம்எம்சிஓ மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தப் புதிய மையம் உருவாக்கப்பட்டுள்ளது. சேலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குச் சேவை வழங்கும் வகையில் அமைந்துள்ள இந்த மையம், உதிரிபாகங்கள் கிடைப்பதை மேம்படுத்துவதுடன், வாடிக்கையாளர்களின் யூவைகளுக்கு விரைவாகப் பதிலளிக்கவும், திறம்படச் சேவையாற்றவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மையத்தில் உதிரிபாகங்களுக்கான தனிக் கிடங்கு மற்றும் இயந்திரங்களை நிறுத்தி வைக்கும் தனிப்பகுதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் முக்கியமான உதிரிபாகங்களையும் இயந்திரங்களையும் வாடிக்கையாளர்கள் எளிதில் அணுக முடியும். மேலும், தங்களது தொழில் துறைத் தேவைகளுக்கு ஏற்ற இயந்திரங்களை நேரில் பார்வையிட்டு, அவற்றின் பயன்பாடுகளைப் புரிந்துகொள்ளவும் இந்த இயந்திரத் தளம் உதவும். இதன் வாயிலாக வாடிக்கையாளர்களுடனான நேரடித் தொடர்பையும் மேம்படுத்த முடியும்.

இயந்திரங்கள், உதிரிபாகங்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம், இயந்திரங்களின் பயன்பாட்டுக் காலம் முழுவதும் விரிவான சேவைகளை வழங்க ஜிஎம்எம்சிஓ திட்டமிட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட இந்தக் கட்டமைப்பு, கட்டுமானம், உள்கட்டமைப்பு, சுரங்கத் தொழில் மற்றும் தொடர்புடைய பிற தொழில்துறைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கும் நிறுவனத்தின் திறனை மேலும் வலுப்படுத்தும்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜிஎம்எம்சிஓ லிமிடெட்டின் தெற்குப் பிராந்தியச் செயல்பாட்டுத் தலைமை அலுவலர் சேத்தன் குமார் வி. கூறுகையில், “சேலத்தில் எங்களது புதிய மையத்தைத் திறந்திருப்பது, வாடிக்கையாளர்களை மேலும் நெருங்கிச் சென்று, அவர்களின் வளர்ந்து வரும் வணிகத் தேவைகளைப் புரிந்துகொண்டு செயல்படுவதற்கான எங்களது உறுதிப்பாட்டில் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். உதிரிபாகங்களுக்கான தனிக் கிடங்கு மற்றும் இயந்திரத் தளத்தின் மூலம், சேலம் மட்டுமின்றி ஈரோடு, நாமக்கல், கரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட அண்டைப் பகுதிகளிலும் உதிரிபாகங்கள், இயந்திரங்கள் மற்றும் சேவைகளை உரிய நேரத்தில் வழங்கும் எங்களது திறனை மேம்படுத்துகிறோம். இயந்திரங்கள், உதிரிபாகங்கள் மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு அருகிலேயே கிடைக்கச் செய்வதன் மூலம், அவர்களின் தேவைகளுக்கு விரைவாகப் பதிலளித்து, ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.” என்று கூறினார்.

பிராந்திய அளவில் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்துவதுடன், மேம்பட்ட கட்டமைப்பு வசதிகள், உதிரிபாக ஆதரவு மற்றும் சேவைத் திறன்கள் வாயிலாக வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதில் ஜிஎம்எம்சிஓ கொண்டுள்ள உறுதிப்பாட்டை இந்தப் புதிய மையம் மேலும் வலுப்படுத்துகிறது.

# சென்னையின் தலைக்கவசக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உற்பத்தியாளர்கள் சங்கம் பாராட்டு



சென்னை 11, அக்டோபர் 2026: இருசக்கர வாகனத் தலைக்கவச உற்பத்தியாளர்கள் சங்கம், இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர்கள் மற்றும் பின்னிருக்கையில் பயணிப்பவர்கள் தலைக்கவசம் அணிவதை உறுதிப்படுத்தும் வகையில் சென்னை பெருநகரப் போக்குவரத்துக் காவல்துறை தீவிரப்படுத்தியுள்ள நடவடிக்கைகளுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளது. மேலும், போலி ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட மற்றும் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு இணங்காத தலைக்கவசங்களைத் தயாரித்து விற்பனை செய்வோருக்கு எதிராக நாடு தழுவிய அளவில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தலைக்கவச விதி மீறல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது, புகைப்படங்கள் மூலம் விதி மீறல்களைப் பதிவு செய்வது, மின்னணு முறையில் அபராதச் சீட்டுகளை வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும். பாலின வேறுபாடின்றி, இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் அனைவரும் தலைக்கவசம் அணிவதை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய தொடர் நடவடிக்கைகள் அவசியம் எனச் சங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் இந்தியாவில் சாலை விபத்துகள் - 2023 அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டில் தலைக்கவசம் அணியாததால் ஏற்பட்ட சாலை விபத்துகளில் 54,568 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 39,160 பேர் வாகன ஓட்டுநர்கள்; 15,408 பேர் பின்னிருக்கைப் பயணிகள். மேலும், தலைக்கவசம் அணியாத நிலையில் ஏற்பட்ட சாலை விபத்துகளில் 1,05,727 பேர் காயமடைந்துள்ளனர்.

இதுகுறித்து சங்கத்தின் தலைவர் திரு. ராஜீவ் கபூர் கூறுகையில், “தலைக்கவசம் அணிவதை உறுதிப்படுத்துவதில் சென்னை பெருநகரப் போக்குவரத்துக் காவல்துறை எடுத்துள்ள உறுதியான நடவடிக்கைகளை முழுமனதுடன் வரவேற்கிறோம். ஓட்டுநர்களும் பின்னிருக்கைப் பயணிகளும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். போக்குவரத்து விதிகள் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

“தலைக்கவசம் அணிவது மட்டுமே போதுமானதல்ல. அது உண்மையான தயாரிப்பாகவும், உரிய சான்றளிப்பைப் பெற்றதாகவும், நடைமுறையில் உள்ள பாதுகாப்புத் தரநிலைகளுக்கு இணங்குவதாகவும் இருக்க வேண்டும். போலி ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட தலைக்கவசங்களைத் தயாரித்து விற்பனை செய்வோர் மீது நாடு முழுவதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

இந்தியத் தர நிர்ணய அமைப்பு (பி.ஐ.எஸ்.) மேற்கொண்ட நடவடிக்கைகளையும் சங்கம் சுட்டிக்காட்டியது. 2025 ஜூலை 5ஆம் தேதி வெளியிடப்பட்ட மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பின்படி, 2024-25 நிதியாண்டில் 30க்கும் மேற்பட்ட சோதனை மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட பி.ஐ.எஸ்., 500க்கும் மேற்பட்ட தலைக்கவசங்களைப் பரிசோதித்தது. தில்லியில் ஒன்பது உற்பத்தியாளர்களிடமிருந்து 2,500க்கும் மேற்பட்ட தரநிலைகளுக்கு இணங்காத தலைக்கவசங்களும், 17 சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் சாலையோரக் கடைகளிலிருந்து சுமார் 500 தரமற்ற தலைக்கவசங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

உற்பத்தி நிலையங்களில் தொடர் ஆய்வுகள், சந்தைக் கண்காணிப்பு, உரிமங்களின் செல்லுபடித் தன்மையைச் சரிபார்த்தல், விநியோகச் சங்கிலியில் பொறுப்புடைமையை உறுதிப்படுத்துதல் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றைத் தீவிரப்படுத்தி, போலி மற்றும் தரமற்ற தலைக்கவசங்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க வேண்டும் என்று சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் பூந்தமல்லி – வடபழனி மெட்ரோ ரயில்

சேலம் 11, அக்டோபர் 2026: இரு திசைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரயில் சேவைகள் இயக்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியான செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கட்டம்-மிமி வழித்தடம் 4-ல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ ரயில் நிலையம் முதல் வடபழனி மெட்ரோ ரயில் நிலையம் வரை 15 கி.மீ. நீளத்திற்கு 11 உயர்மட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் அக்டோபர் 11, 2026 முதல் மெட்ரோ ரயில் பயணிகள் சேவை தொடங்கப்படுகிறது என்பதை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

பூவிருந்தவல்லி புறவழிச்சாலை, பூவிருந்தவல்லி பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி அரசு மருத்துவமனை, கரையான் சாவடி, குமணண் சாவடி, காட்டுப்பாக்கம், அயப்பன்தாங்கல், தெள்ளியாரகரம், போரூர் புறவழிச்சாலை, போரூர் சந்திப்பு மற்றும் வடபழனி ஆகிய 11 மெட்ரோ ரயில் நிலையங்கள் இந்த வழித்தடத்தில் உள்ளன.

தொடக்க நாளான 11.10.2026, மெட்ரோ ரயில் சேவைகள் மாலை 4 மணி முதல் தொடங்கி, இரு திசைகளிலும் இரவு 9 மணி வரை இயக்கப்படும். அதனைத் தொடர்ந்து, 12.10.2026 முதல், இந்த 15 கி.மீ. நீளமுள்ள வழித்தடத்தில் இரு திசைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரயில் சேவைகள் இயக்கப்படும்.

நாள்தோறும் இரு முனையங்களிலிருந்தும் (பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ மற்றும் வழித்தடம் 4 வடபழனி மெட்ரோ) கடைசி மெட்ரோ ரயில் சேவை இரவு 9 மணிக்கு புறப்படும். பொதுமக்கள் மற்றும் பயணிகள் அனைவரும் மெட்ரோ ரயில் சேவைகளைப் பயன்படுத்தி, தங்களது பயணங்களை அதற்கேற்ப திட்டமிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# அடையாறு பகுதியில் உறவினரிடம் கொடுத்த தங்கநகையை திரும்ப கேட்ட பெண்ணை தாக்கிய சரித்திரப்பதிவேடு குற்றாளி கைது

சேலம் 11, அக்டோபர் 2026: சென்னை, எண்ணூர், நேரு நகர் 2வது குறுக்கு தெருவில் கமலி, வ/28, க/பெ. தினேஷ், என்பவர் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், இவர் தனது சித்தி மகனான சரத்குமார் என்பவருக்கு கடந்த 2023ம் ஆண்டு 5 சவரன் தங்கநகையை அடகு வைக்க கொடுத்து உதவியதாகவும், 15 நாட்களில் தங்க நகையை மீட்டு தருவதாக கூறிய சரத்குமார், இது வரை திரும்ப தராமல் ஏமாற்றி வந்ததால், கமலி கடந்த 07.10.2026 அன்று சரத்குமாரின் வீட்டிற்கு நேராக சென்று தனது தங்கநகையை திரும்ப கேட்ட போது, சரத்குமார் கமலியை தகாத வார்த்தைகளால் பேசியும், கையால் தாக்கியும், தங்கநகையை தரமுடியாது உன்னால் முடிந்ததை பார் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார். காயமடைந்த கமலி இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தன்னை தாக்கிய சரத்குமார் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜே-2 அடையாறு காவல் நிலையத்தில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ்) மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (திஎன் பிஹெச்டபிள்யு) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஜே-2 அடையாறு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை மேற்கொண்டு, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சரத்குமார், வ/31, ஐஸ்வரியா காலனி, அடையாறு, சென்னை என்பவரை நேற்று முன்தினம் (09.10.2026) கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி சரத்குமார் என்பவர் ஜே-5 சாஸ்திரி நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 5 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சரத்குமார் என்பவர் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (09.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி, சிறையில் அடைக்கப்பட்டார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## ஜோய்ஆலுக்காஸ் வேளச்சேரி ஷோரூமில் 'பிரிலியன்ஸ் டைமண்ட ஜுவெல்லரி ஷோ' 2026 அக்டோபர் 9 முதல் 25 வரை

சென்னை 11, அக்டோபர் 2026: ஜோய்ஆலுக்காஸ், உலகின் ஃபேவரிட் ஜுவல்லர் தனது வேளச்சேரி, சென்னை ஷோரூமில் 2026 அக்டோபர் 9 முதல் 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோவை' நடத்துகிறது. ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்த சிறப்புக் கண்காட்சி, வைர நகைகளின் கைவினைத்திறன், நேர்த்தி மற்றும் புதுமையை கொண்டாடும் மறக்க முடியாத அனுபவமாக அமையும்.

மணமகளுக்கான பிரமாண்டமான நகைத் தொகுப்புகள் முதல், அன்றாடம் அணிய ஏற்ற நவீன மினுமினுப்புகள் டைமண்ட்- காலத்தால் அழியாத பாரம்பரியத்தையும் நவீன அழகியலையும் இணைக்கும் நகைகளை இந்தக் கண்காட்சி வழங்குகிறது. ஒவ்வொரு வடிவமைப்பும் ஒரு தலைசிறந்த படைப்பு; கண்காட்சி நடைபெறும் குறுகிய காலத்திற்கு மட்டுமே கிடைக்கும்.

இது குறித்து ஜோய் ஆலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான டாக்டர். ஜோய் ஆலுக்காஸ் கூறியதாவது: 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ' என்பது வைரங்களின் மீதுள்ள பெருமைக்கும், நகை வடிவமைப்பில் முழுமைத் தன்மையை நோக்கிய எங்கள் அர்ப்பணிப்பிற்கும் உள்ள தொடர்பை விவரிக்கும் ஓர் நிகழ்வாகும். வேளச்சேரி, சென்னை எங்கள் இதயத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. திருவிழா



காலத்தை முன்னிட்டு இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது. அழகு, தனித்துவம் மற்றும் சிறந்த கைவினைத்திறனை பிரதிபலிக்கும் பிரத்யேக வடிவமைப்புகளை வாடிக்கையாளர்கள் கண்டறிய ஓர் அரிய வாய்ப்பை வழங்கும்." என்று தெரிவித்தார்.

இந்த சிறப்பு நிகழ்வை முன்னிட்டு, கண்காட்சி நடைபெறும் காலத்தில் 31 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பில் டைமண்ட் நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலவச தங்க நாணயம் வழங்கப்படும். இது அவர்களின் ஷாப்பிங் அனுபவத்திற்கு மேலும் சிறப்பைச் சேர்க்கும்.

பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ', 2026 அக்டோபர் 25 வரை வேளச்சேரி, சென்னை ஷோரூமில் பிரத்தியேகமாக நடைபெறும். ஆடம்பரம், அன்பு மற்றும் காலத்தால் அழியாத அழகின் கதைகளை சொல்லும் அற்புதமான டைமண்ட் உலகத்தை நேரில் கண்டு ரசிக்க அனைத்து வாடிக்கையாளர்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். கவர்ச்சியின் கதையைச் சொல்லும் வைர நகைகளின் அற்புத உலகத்திற்கு அனைவரையும் வரவேற்கிறோம்.

## 'ஹைக்கூ' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா!

சென்னை 11, அக்டோபர் 2026: விஷன் சினிமா ஹவுஸ் சார்பில் டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து ஆகியோர் தயாரிப்பில், யுவராஜ் சின்னசாமி இயக்கத்தில் நடிகர்கள் ஏகன், ஸ்ரீதேவி மற்றும் ஃபெமினா ஜார்ஜ் ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் திரைப்படம் 'ஹைக்கூ'. வரும் அக்டோபர் 23ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ள இத்திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது.

அமைச்சர் ராஜ் மோகன், "தளபதியுடைய பல படங்கள் ஓடிய திரையில் என்னுடைய தம்பி ஏகன் படம் வெளியாகவிருப்பதும் மகிழ்ச்சி. கடின உழைப்பாளி ஏகன். இயக்குநர், படக் குழு மற்றும் இன்றைய நாயகன் சித்து என எல்லோருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். நல்ல கருத்துகளோடு பொழுதுபோக்கு அம்சமும் சேர்ந்திருக்கும் படங்கள் சமீபத்தில் வெளியாக வில்லை. 'ஹைக்கூ' அந்த குறையை போக்கும். படம் மிகப்பெரும் வெற்றி அடைய வாழ்த்துக்கள்".

தயாரிப்பாளர் கலைப்புலி தாணு, "இரண்டு கதாபாத்திரங்களுக்கிடையே ஆன மனஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் துல்லியமாக படமாக்கி இருக்கிறார்கள். அதற்கு சித்து அற்புதமான இசை கொடுத்திருக்கிறார். பாடல்களும் சிறப்பாக உள்ளது. படம் மிகப்பெரும் வெற்றியடையும். ஏகன் பெரிய இடத்தை அடைவார்".

பாடலாசிரியர் மோகன்ராஜா, "இந்த டைட்டிலுக்கே இயக்குநருக்கு வாழ்த்துக்கள். ஹைக்கூ என்பது ஒரு தரிசனம், அன்பு. எனக்கு பல ஹைக்கூ கவிதைகள் பிடிக்கும். இந்த தலைமுறைக்கும் ஹைக்கூ கொண்டு போய் சேர்க்க வேண்டும். இந்தப் படத்தில்



வாய்ப்பு கொடுத்த சித்துவுக்கு நன்றி. ஏகன் இன்னும் பெரிதாக ஜெயிக்க வேண்டும்".

இசையமைப்பாளர் சித்துகுமார், "'ஹைக்கூ' என்னுடைய 15 ஆவது படம். குடும்பம், நண்பர்களுக்கு நன்றி. விஷன் சினிமா ஹவுஸ் எப்போதுமே எனக்கு ஸ்பெஷல். ஏகன் இனிமையானவர். தமிழ் சினிமாவில் பெரிய இடத்திற்கு செல்வார். நடிகர்கள் மற்றும் படக் குழுவினர் அனைவருக்கும் நன்றி. படம் நிச்சயம் அனைவருக்கும் பிடிக்கும்". இயக்குநர் யுவராஜ், " பெரிதாக எந்த கண்டிஷனும் சொல்லாத தயாரிப்பாளர் அருள் சார். அவருக்கு நன்றி. ஒத்துழைப்பு கொடுத்த படக்குழுவினருக்கு நன்றி. சித்துவின் ஆல்பம் சிறப்பாக வந்துள்ளது. என்னை நம்பி நான் சொன்னதை எல்லாம் செய்த ஏகன், ஃபெமினா, ஸ்ரீதேவிக்கு நன்றி".

தயாரிப்பாளர் அருளானந்து, "விஷன் சினிமா ஹவுஸின் மூன்றாவது படம் இது. சினிமாவில் தெரிவதற்காக 18 வருட உழைப்பை கொடுத்திருக்கிறார் ஏகன். நன்றாக நடித்தால் மட்டுமே சினிமாவில் நீடிக்க முடியும் என ஏகனிடம் சொல்லியிருக்கேன். என்னிடம் சொன்னதை அப்படியே யுவராஜ் எடுத்திருக்கிறார். எனக்கு படம் ரொம்ப பிடித்திருக்கிறது. விஷன் சினிமாவின் அடுத்து ஐந்து படங்களுக்கும் சித்துதான் இசையமைப்பாளர். இசையும் கவிதை போல வந்திருக்கிறது. படத்தில் உழைத்த அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்".

## அமெரிக்காவுக்கு டீசல் அனுப்ப ரஷ்ய அதிபர் புடின் சம்மதம். அதிபர் டிரம்ப் தகவல

சென்னை 11, அக்டோபர் 2026: அமெரிக்காவில் அதிகரித்து வரும் எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்த டீசல் வினியோகம் செய்ய, ரஷ்ய அதிபர் புடின் ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த முடிவுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். ரஷ்யாவுக்கு வருவாய் கிடைப்பது, உக்ரைன் மீதான போரைத் தொடர உதவும் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே 4 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. எனினும், இதில் உடன்பாடு எட்டப்படவில்லை. இதனால் போர் நீடித்துக் கொண்டே செல்கிறது.

ரஷியாவிடம் இருந்து சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் எரிபொருள் கொள்முதல் செய்து, அந்த நாட்டை வளப்படுத்துவதாகவும், அதன் காரணமாகவே ரஷியா தொடர்ந்து சண்டையிட்டு வருவதாகவும் டிரம்ப் விமர்சித்தார். மேலும், ரஷியாவிடம் இருந்து எரிபொருள் கொள்முதல் செய்யும் நாடுகளுக்கு கடுமையான வரியையும் விதித்தார். ஆனால், தற்போது திடீர் திருப்பமாக அமெரிக்காவே ரஷியாவிடம் இருந்து டீசல் கொள்முதல் செய்ய முடிவு செய்துள்ளது.

தொலைபேசி பேச்சுக்குப் பின்... ரஷ்ய அதிபர் புதினுடன் தொலைபேசியில் பேசிய பிறகு, அமெரிக்கா மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு டீசல் வினியோகம் செய்ய ரஷியா ஒப்புக்கொண்டதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டிரம்ப் பேசுகையில் ''இதன்படி, உடனடியாக 3 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான டீசல் வினியோகம் செய்யப்படும். நவம்பர் மாதத்தில் மேலும் 5 லட்சம் மெட்ரிக் டன் டீசல் வழங்கப்படும். அதைத் தொடர்ந்து மேலும் 10 லட்சம் மெட்ரிக் டன் டீசல் வினியோகம் செய்யப்படும்'' என்றார்.

''அமெரிக்காவில் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் சரக்கு வாகன ஓட்டுநர்கள் உள்ளிட்டோர் எரிபொருள் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விலையைக் குறைப்பதே தனது முக்கிய நோக்கம்” என்றார் அவர்.

உக்ரைன் மீதான போரால் ரஷ்யா மீது அமெரிக்கா பல்வேறு கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது. இந்நிலையில், ரஷ்ய டீசலை சர்வதேச சந்தைக்கு கொண்டு வர ஏதுவாக, அமெரிக்க நிதித்துறை தற்காலிக உரிமத்தை வழங்கி தளர்வு அளித்துள்ளது.

ஜெலன்ஸ்கி எதிர்ப்பு

டிரம்பின் இந்த முடிவுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள கருத்தில், “புதினுக்கு வழங்கப்படும் சலுகைகள் அமைதியைக் கொண்டு வராது. ரஷியா பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்ய அனுமதிப்பது, முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய போரை நீட்டிப்பதற்கான முதலீடாகும்” என்று விமர்சித்துள்ளார்.

மேலும், ரஷ்யாவுக்கு எதிரான தடைகளைத் தளர்த்துவதற்குப் பதிலாக, இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர அடிப்படையில் பதற்றத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## அதிகார அமைப்பின் மீது ராகுலுக்கு மரியாதை இல்லை என்பது வெட்கக்கேடான விஷயம் - மத்திய அமைச்சர் பியூஷ் கோயல்

சென்னை 11, அக்டோபர் 2026: அரசியலமைப்பு ரீதியான அதிகார அமைப்பின் மீது எதிர்க்கட்சித் தலைவர் ராகுலுக்கு மரியாதை இல்லை என்பது வெட்கக்கேடான விஷயம் என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்து உள்ளார்.

டில்லியில் அவர் கூறியதாவது: எந்தவொரு அரசியலமைப்பு ரீதியான அதிகார அமைப்பின் மீதும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுலுக்கு மரியாதை இல்லை என்பது வெட்கக்கேடான விஷயம். இந்தியக் குடிமகனாகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் தனக்குள்ள சட்டரீதியான அல்லது அரசியலமைப்பு ரீதியான கடமைகள் குறித்த எந்தப் புரிதலும் அவரிடம் இல்லை.

ராகுல் ஆணவம், மரியாதையற்ற நடத்தை மற்றும் கண்ணியமின்மையை வெளிப்படுத்தியுள்ளார்; அத்துடன் சட்டம் மற்றும் பொது அறிவு குறித்த அறியாமையையும் வெளிப்படுத்தியுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும். ஜனாதிபதியுடன் சந்திக்க நேரம் கோரப்படும்போது, அவர் உடனடியாகவும் கனிவுடனும் அதை வழங்குகிறார்.

ராகுல் தனது குற்றச்சாட்டுகளில் ஏதேனும் உண்மைத் தன்மை இருந்திருந்தால், அவர் முன்வைத்த கோரிக்கைக்குத் தேவையான ஆதாரங்களுடன் செல்வது அவரது கடமையாகவும், கண்ணியமான செயலாகவும் இருந்திருக்கும். அவர் ஒரு கோரிக்கை மனுவை அளித்தபோது, அதில் அவரது போலியான குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் தரவுகளோ, உண்மைகளோ, ஆதாரங்களோ இணைக்கப்படவில்லை என்பது வெளிப்படை. அவரது பொய்களை ஆதரிக்க எதுவும் இல்லாததால், தேவையான ஆதாரங்களை வழங்குமாறு ஜனாதிபதி அவரிடம் கேட்டுக் கொண்டார்.

சந்திப்பிற்கு பிறகு ராகுல், ஜனாதிபதி திரவுபதி முர்மு தனது குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதாக எந்த அடிப்படையில் கூறுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. தான் சொல்வதெல்லாம் வேதவாக்காகக் கருதப்பட வேண்டும் என்பது போல, ஆதாரம் கேட்டதற்காக அவர் ஜனாதிபதியை மிகவும் இழிவான வார்த்தைகளால் விமர்சித்தார். ராகுலின் செயலை நான் கண்டிக்கிறேன்.

அவருடன் சென்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தவறான நடத்தை, ஆணவம் மற்றும் நாட்டின் மிக உயர்ந்த அரசியலமைப்பு அதிகார அமைப்பின் மீதான மரியாதையற்ற நடத்தையையும் நான் கண்டிக்கிறேன். ராகுல் உடனடியாக ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியாகத் திகழும் ஜனாதிபதியிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்பை அவர் முற்றிலும் புறக்கணித்துவிட்டார். அரசியலமைப்பை கையில் ஏந்திச் செல்வதால் மட்டும் அதற்கு மரியாதை செலுத்திவிட முடியாது. அரசியலமைப்பு மீதான உங்கள் மரியாதையை உங்கள் நடத்தையும் செயல்பாடுகளுமே வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு கூறினார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
அக்டோபர் 11, 2026

## 'டோரதி' திரைப்படத்தின் வெற்றியை அர்த்தமுள்ளதாக மாற்றும் வகையில் 25 திருநங்கைகளின் நலனுக்காக நிதியுதவி வழங்கிய படக்குழு!



சென்னை 11, அக்டோபர் 2026: ஜியோ ஸ்டுடியோஸ், சிக்யா என்டர்டெயின்மென்ட், தம்மம் பிலிம்ஸ் இணைந்து 'டோரதி' படக்குழு சார்பில் தீவிர உடல் நலப் பாதிப்புகளுடன் போராடும் 25 திருநங்கைகளின் நலனுக்காக நிதியுதவி வழங்கினர்.

கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய 'டோரதி' திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், மனிதநேயம், கண்ணியம், ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை குறித்த விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது. படத்தின் திரையரங்கு வெற்றியையும், ரசிகர்களிடமிருந்து கிடைத்த உணர்வுபூர்வமான வரவேற்பையும் படக்குழு கொண்டாடி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தீவிர உடல்நலப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள 25 திருநங்கைகளின் நலனுக்காக நிதியுதவி வழங்கியுள்ளது.

'டோரதி' திரைப்படம் வணிகரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. மனிதர்களின் உணர்வுகளை நுட்பமாகச் சித்தரித்த விதத்திற்கும், ஒவ்வொருவரின் கண்ணியம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உரிமையை வலியுறுத்தியதற்கும் ரசிகர்கள் தெரிவித்த பாராட்டுகளும், பகிர்ந்துகொண்ட தனிப்பட்ட அனுபவங்களும் படக்குழுவினரை நெகிழச் செய்துள்ளன. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவே திருநங்கைகளின் நலனுக்கு நிதியுதவி வழங்கும் முடிவு படக்குழு எடுத்தது.

கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி சென்னையில் உள்ள கமலா திரையரங்கில் நடைபெற்ற 'டோரதி' படத்தின் வெற்றி விழாவின்போது இந்த நிதியுதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அப்போது, திருநங்கைகள் நல அமைப்பான "எங்கள் சகோதரன்" அமைப்பின் பிரதிநிதிகள், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மருத்துவ மற்றும் நிதியுதவி தேவைப்படும் 25 பேரை அறிமுகப்படுத்தினர். அவர்களில் புற்றுநோய், சிறுநீரகச் செயலிழப்பு போன்ற தீவிர நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும், கை, கால்களை இழந்தவர்களும், பிறவியிலேயே பார்வையற்றவர்களும் இடம்பெற்றிருந்தனர். இந்த 25 பேருக்கும் காசோலையை இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் வழங்கினார்.

இந்த நிதியுதவியைப் பெறுபவர்களை வெற்றி விழாவுக்கு அழைத்து வருவது குறித்துப் படக்குழுவுக்கு தகவல் தெரிவித்தபோது, அவர்களுக்கு பயணம் செய்து வருவதில் வருவதில் ஏற்படக்கூடிய சிரமங்கள் குறித்து கருத்தில் கொண்டு இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் கவலை தெரிவித்துள்ளார். இருப்பினும், உடல்நலப் பிரச்சினைகளையும் பொருட்படுத்தாமல், தங்களை நெகிழச் செய்த திரைப்படத்தை உருவாக்கிய இயக்குநரை நேரில் சந்தித்து வாழ்த்த வேண்டும் என்ற விருப்பத்துடன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

அடுத்த ஓராண்டுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உணவுச் செலவுகளைச் சமாளிக்க இந்த நிதி உதவும் என்று நெகிழ்ச்சியுடன் நிதியுதவி பெற்றவர்கள் பகிர்ந்து கொண்டனர். நோய்களுடன் போராடுவதோடு, மாற்றுத்திறன் சார்ந்த சவால்களையும் சமூகப் புறக்கணிப்பையும் எதிர்கொண்டு வரும் அவர்களுக்கு, இந்த நிதியுதவி அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் ஆதரவாக இருக்கும் என அமைப்பின் பிரதிநிதிகளான சுதா மற்றும் ஜெயா தெரிவித்தனர்.

சமூகத்தின் முன்முடிவுகளையும் பார்வைகளையும் கடந்து, கதையில் இடம் பெறும் மனிதர்களையும் அவர்களின் உணர்வுகளையும் மையப்படுத்த முயன்ற இந்தப் படத்தின் வெற்றி, திரையரங்குகளுக்கு வெளியேயும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருப்பதாகப் படக்குழு நம்புகிறது.

கார்த்திக் சுப்புராஜ் எழுதி இயக்கியுள்ள 'டோரதி' திரைப்படத்தை ஜோதி தேஷ் பாண்டே, குனீத் மோங்கா கபூர் மற்றும் அச்சின் ஜெயின் ஆகியோர் தயாரித்துள்ளனர். மேஸ்ட்ரோ இளையராஜா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

கீர்த்தி சுரேஷ், சனந்த் மற்றும் ரிஷிகாந்த் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் சிக்யா என்டர்டெயின்மென்ட் இணைந்து இப்படத்தை வழங்கியுள்ளது.

## சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் – குஷ்பு பேட்டி



சென்னை 11, அக்டோபர் 2026: இந்தக் கூட்டத்தில் தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார். மேலும், பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, அவற்றைச் சங்க உறுப்பினர்களிடம் எடுத்துரைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் தயாரிப்பாளர்களின் பிரச்சினைகள் குறித்தும், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளன. இன்றைய கூட்டத்தில் ஏராளமான தயாரிப்பாளர்கள் பங்கேற்றிருப்பது தங்களுக்குப் பெரும் பலமாக இருப்பதாகக் குறிப்பிட்ட குஷ்பு, தயாரிப்பாளர்கள் நலமாக இருந்தால்தான் சங்கமும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இன்றைய கால கட்டத்தில் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை உள்ளது. ஆனால், திரைக்கு முன்னால் இருப்பவர்களை மட்டுமே மக்கள் அதிகம் அறிந்துள்ளனர். திரைக்குப் பின்னால் இருந்து பணியாற்றும் தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் பலருக்கும் தெரிவதில்லை. இத்தகைய பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெறுவதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், சங்கத்தில் உள்ள பல தயாரிப்பாளர்கள் தற்போது தொடர்களைத் தயாரித்து வருவதாகவும், சிலர் புதிய தொடர்களைத் தயாரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

தயாரிப்பாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளின்போது பெப்சியின் தலைவர் திரு ஆர்கே செல்வமணி அவர்கள் தொடர்ந்து ஆதரவாக இருப்பதாகக் குறிப்பிட்ட குஷ்பு, பிற சங்கங்களைச் சேர்ந்தவர்களும் தங்களுக்குப் பெரும் ஆதரவு அளித்து வருவதாகவும், அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கும் இந்தக் கூட்டம் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்தப் பொதுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ள தீர்மானங்கள், மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் மற்றும் சில ஆச்சரியமூட்டும் அறிவிப்புகள் குறித்தும் தயாரிப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்ள உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சின்னத்திரை தயாரிப்பாளர்கள் பொதுவாக எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினை நிதி சார்ந்தது என்று குஷ்பு தெரிவித்துள்ளார்.

சின்னத்திரைக் கலைஞர்களின் வளர்ச்சி குறித்துக் குஷ்பு பேச்சு

கலைஞர்களை ஒரு குறிப்பிட்ட தொடரில் மட்டுமே நடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது எனக் குஷ்பு தெரிவித்துள்ளார்.

விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன் போன்ற கலைஞர்கள் பல்வேறு பின்னணிகளில் இருந்து வளர்ந்து வந்து, இன்று திரைத்துறையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளனர். இதன் மூலம், கலைஞர்களின் வளர்ச்சியில் சின்னத்திரையும் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சின்னத்திரையில் இருந்து தொடங்கி இன்று பெரிய நட்சத்திரங்களாக உயர்ந்துள்ள கலைஞர்கள், தற்போது சின்னத்திரைக்கு தங்களது ஆதரவை வழங்கி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இது சின்னத்திரைக்குக் கிடைத்த பெருமையாகவும் வெற்றியாகவும் பார்க்கப்படுகிறது என்று குஷ்பு தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்துப் பேசிய குஷ்பு, ஒவ்வொரு தொழில்நுட்பத்திற்கும் சாதகமான மற்றும் பாதகமான அம்சங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதைப் போல, தொழில்நுட்ப வளர்ச்சியிலும் நல்லதும் கெட்டதும் இருக்கலாம். அதனை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம் என்று அவர் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்களின் செயல்பாடுகளைக் கடுமையாக விமர்சித்த அவர், குறிப்பாகப் பெண்களைப் பாதிக்கும் வகையில் போலியான காணொளிகளை உருவாக்குவது கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

ஒரு பெண்ணாகவோ, நடிகையாகவோ அல்லது வேறு எந்தத் துறையைச் சேர்ந்தவராகவோ இருந்தாலும், மற்றவர்களைப் பாதிக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கு முன்பு, தங்களது குடும்பத்தில் உள்ள பெண்களை வைத்து அத்தகைய காணொளிகளை உருவாக்கிப் பார்க்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு செய்தால் மட்டுமே, அத்தகைய செயல்களால் ஏற்படும் பாதிப்புகளை உணர முடியும் என்று செய்தியாளர்களிடம் குஷ்பு தெரிவித்துள்ளார்.

தயாரிப்பாளர்கள் சார்பில் அரசிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் குஷ்பு தெரிவித்துள்ளார்.

## ஜார்கண்ட் மாநிலம் தியோகரில் முன்னாள் ராணுவத்தினருக்கான உதவிகள் வழங்கும் விழாவில் குடியரசு துணைத்தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் பங்கேற்பு

சென்னை 11, அக்டோபர் 2026: குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், நேற்று (10.10.2026) ஜார்க்கண்ட் மாநிலம் தியோகரில் நடைபெற்ற சைன்ய சம்பர்க் மேளா எனப்படும் முன்னாள் ராணுவத்தினருக்கு உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்றார். சந்தால் பர்கானா பகுதி முழு'தும் உள்ள முன்னாள் ராணுவ வீரர்கள், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்குவதற்காக, ராணுவமும் தியோகர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர் தேசத்திற்காக விலைமதிப்பற்ற தியாகங்களையும் பங்களிப்புகளையும் செய்த முன்னாள் ராணுவ வீரர்களுக்குப் புகழஞ்சலி செலுத்தினார். ராணுவ வீரர்களும் அவர்களது குடும்பத்தினரும் செய்த தியாகங்களை தேசம் ஒருபோதும் மறக்காது என்று அவர் கூறினார்.

நமது வீரர்கள் எப்போதும் தேசத்துக்குத் துணை நிற்கிறார்கள் எனவும் நாமும் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் துணை நிற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் படை வீரர்களும் அவர்களது குடும்பத்தினரும் எப்போதும் மதிக்கப்படுவதையும், ஆதரிக்கப்படுவதையும், அக்கறையுடன் கவனிக்கப்படுவதையும் உறுதிசெய்யும் வகையில், இதுபோன்ற விழாக்கள் ஒரு தொடர்ச்சியான தேசிய அர்ப்பணிப்பாக மாற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜார்க்கண்ட் ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்வார், மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ், ராணுவத்தின் மூத்த அதிகாரிகள், முன்னாள் ராணுவ வீரர்கள், அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## நதிநீர் விவகாரங்கள் குறித்து விவாதிக்க திட்டம் – அக் 13ல் சந்திரபாபு நாயுடுவை சந்திக்கிறார் முதல்வர் விஜய்

சென்னை 11, அக்டோபர் 2026: தமிழக முதல்வர் விஜய், அக்டோபர் 13ம் தேதி விஜயவாடாவில் ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

தெலுங்கு கங்கை திட்ட ஒப்பந்தப்படி ஆந்திரப் பிரதேசம் ஆண்டு தோறும் 12 டி.எம்.சி கிருஷ்ணா நதி நீரை மாநில எல்லையில் தமிழகத்திற்கு வழங்க வேண்டும். இருப் பினும், இந்த ஆண்டு அக்டோபர் 9ம் தேதி வரை தமிழகத்திற்கு 2.251 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே கிடைத்தது.

இது மட்டுமின்றி, ஆந்திராவிலிருந்து தமிழகத்துக்குள் வரும் ஆறுகளில் அணை கட்டவும் அந்த மாநில அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தவும், நதிநீர் இணைப்பு குறித்து ஆலோசனை நடத்தவும் தமிழக முதல்வர் விஜய், வரும் 13ம் தேதி விஜயவாடா செல்கிறார். அங்கு முதல்வர் சந்திர பாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் மற்றும் அமைச்சர்களை சந்தித்து பேச்சு நடத்த இருக்கிறார் என தகவல் வெளியாகி உள்ளன.